1975 மார்ச் 19]

வரிசை எண்ணும் கல்வி மாவட்டத்தின் பெயரும்.	பகுதி நேர ஆசிரியர்கள்.	முழுநேர ஆசிரியர்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
34 ஈரோடு	..	7	7
35 கோபிச்செட்டிபாளையம் ..	..	18	18
36 நீலகிரி	..	18	18
37 ராமநாதபுரம் (சென்ட்ரல்) ..	..	5	5
38 தேவகோட்டை ..	..	23	23
39 விருதுநகர்	..	4	4
40 இராமநாதபுரம்	..	7	7
41 திருநெல்வேலி (தெற்கு)	..	21	21
42 தூத்துக்குடி	..	34	34
43 திருநெல்வேலி (சென்ட்ரல்)	..	33	33
44 கோவில்பட்டி	..	2	2
45 நாகர்கோவில்	..	8	8
46 தக்காலே	..	9	9
47 குழித்துறை	..	8	8
மொத்தம் ..	8	562	570

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

புளியங்கால் ஓடையின் குறுக்கே பாலம்.

*386 வின.—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரக்காணம் பகுதியில் உள்ள புளியங்கால் ஓடையின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் பகுதியில் உள்ள புளியங்கால் ஓடையைத் தக்க முறையில் அபிவிருத்தி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 6.5 இலட்சத்திற்கான மதிப்பீட்டில், புளியங்கால் ஓடையின் உள்ளே கடல் நீர் புகாமல் தடுக்கும் பொருட்டு, ரெகுலேட்டருடன் இணைந்த பாலம் ஒன்று கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there are a number of jungle streams and rivers flowing in various parts of the State, especially in the hilly districts of The Nilgiris and Dharmapuri which stand in the Mysore plateau—a number of rapid streams innumerable in number, flow there. But the Highways Department say that they have no jurisdiction over it. The Panchayat Unions say that they have no funds. May I know from the Hon. Minister for Works whether any special arrangements would be made to see that some causeways or bridges are constructed over those rivers?

THE HON. THIRU P. U. SHANMUGAM: The hon. Member refers to jungle streams over which we have no jurisdiction. I request the hon. Member to write to me, so that I can refer the matter to the Highways Engineer and see whether these works can be taken up under „ Other Road Programmes ",